★ விலை ரூபா 1.25

ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

— வெள்ளி விழா ஆண்டு —

வரு 25 | கிழ 5 | ரபி. ஆகி 15 | இதழ் 337
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 19-1-84

ஜனாதிபதியுடன் சந்திப்பு: தயாபரன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள் கோரிக்கைபற்றிப் பேசுவதற்கு யாழ். பிரஜைகள் குழு மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜனாதிபதியுடனான நேற்றைய சந்திப்பு, பிரஜைகள் குழுவிலிருந்து எவரும் மாணவர் பிரதிநிதிகளுடன் செல்லாத காரணத்தாலும், போக்குவரத்து வசதியீனம் காரணமாகவும் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக இடம்பெயர்ந்த பல்கலைக் கழக தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர் திரு. ரி. தயாபரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்கு, யாழ். பிரஜைகள்குழு, மற்றுமொரு சந்தர்ப்

(8-ம் பக்கம் பார்க்க)

கடைசி நேரத்தில் குவைத் பயணம் ரத்து!

போலி 'பாஸ்போர்ட்'!

55 இளைஞர்கள் விசாரணை!

(கட்டுநாயக்கா)

தொழில் வாய்ப்புப் பெற்று குவைத்துக்குச் செல்லவிருந்த ஐம்பத்தைந்து இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்!

கட்டுநாயக்கா விமானநிலையத்தில், நேற்று முன்தினம் குவைத்துக்குச் செல்லும் விமானத்தில் ஏறுவதற்குத் தயாராக இருந்தபோது இவர்களது பயணம் கடைசிநேரத்தில் ரத்துச்செய்யப்பட்டது.

இந்த இளைஞர்கள் போலிக் கடவுச் சீட்டுகள் வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு, விமானத்தில் ஏறவிடாது தடுக்கப்பட்டனர்.

கடவுச் சீட்டுக்களை மிக நுணுக்கமாகப் பரிசோதித்த அதிகாரிகள், போலிக் கடவைச் சீட்டு என்ற சந்தேகத்தின் பேரில், இவர்களின் பயணத்தை மேற்கொள்ள முடியாது என்று அறிவித்தனர்.

தொழில்பெற்று குவைத்தில் வேலைசெய்வதற்காகப் புறப்பட்ட இந்த இளைஞர்களின்

(8ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி தனிமாவட்டப் பிரேரணை

(கொழும்பு)

கிளிநொச்சியைத் தனி மாவட்டமாக்கும் பிரேரணை இன்று பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

பாராளுமன்றம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கூடவுள்ளது.

அவசரகாலச் சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இன்று பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது. (வெ)

"நாங்கள் அழுதபோது எங்களை இறக்கிவிட்டனர்"

தாதிமார் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

இனம் தெரியாத ஆயுதந் தாங்கிய சில நபர்கள் உண்ணாவிரதம் இருந்தவர்களுடன் தங்களைக் கடத்தி வந்து யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக இறக்கிவிட்டுச் சென்றதாகத் தாதிகள் மூவரும் யாழ். பொலிசில் நேற்று வாக்குமூலமளித்தகையில் தெரிவித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக சிவன் கோவில் முன்றலில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்த 9 மாணவ மாணவிகளைக் கண்காணிப்பதற்காகத் தனியார் மருத்துவ மனையொன்றைச்

8-ம் பக்கம் பார்க்க)

சர்வகட்சி மாநாடு

மீண்டும் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையின் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணுமுகமாக கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாடு ஆறாவது நாளாக இன்று காலை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

ஏற்கனவே உடன்பாடுக்குள்ளான நான்கு அம்சத்திட்டம்

(8-ம் பக்கம் பார்க்க)

மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

மின்சார வெட்டு தினமும் 2 மணித்தியாலத்திலிருந்து 3 மணித்தியாலயமாக அதிகரிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்வெட்டு அதிகரிக்கப்படும்பட்சத்தில் அதுபற்றி பொதுமக்களுக்கு ஒரு வார கால அவகாசம் அளிக்கப்படும்.

காசல்றி, மவுசாக்கல நீர்த்தேக்கங்களில் போதியளவு நீரில்லாமையினாலேயே மின்வெட்டு நேரத்தை அதிகரிக்க வேண்டியுள்ளதாக மின்சார சபைத்தலைவர் தெரிவித்தார்.

ரூ. 1 லட்சம் மின்சக்தி களவாக உபயோகம்

கம்பர்மலைக் கிராமத்தில் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்சக்தி களவாக உபயோகிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள கம்பர்மலைக் கிராமத்தில் இக்களவு கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை அதிகாரிகள் குழு திடீர் பரிசோதனை ஒன்றை இக்கிராமத்தில் மேற்கொண்டிருந்தபோது, களவாக மின்சாரம் உபயோகிக்கப்பட்டிருந்தது தெரிய வந்ததாம்.

கடந்த ஒருவருட காலமாக இக்களவு நடைபெற்று வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

இக்கிராமத்தில் 30-40 வீடுகளில் களவாக மின்சக்தி உபயோகிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அங்குள்ள மின்பாவனைக்குரிய உபகரணங்களை அதிகாரிகள்குழு கைப்பற்றியுள்ளது.

[8-ம் பக்கம் பார்க்க

ம. ஐ. மு. பொலிட்பீரோ கூடியது

(கொழும்பு)

மக்கள் ஐக்கிய முன்னணியின் அரசியல்குழு 'பொலிட்பீரோ' நேற்றுக்கூடியது.

சர்வகட்சி மகாநாட்டில் மக்கள் ஐக்கிய முன்னணி கலந்துகொள்ளாதது தொடர்பாக ஓரிரு தினங்களில் அறிக்கை வெளியிடுவதென்றும் நேற்றுத்தீர்மானிக்கப்பட்டது.

யாழ். பிரதானவீதிகள் திருத்தம்

மதிப்பீடு: ஒரு கோடி 38 லட்சம் ரூபா
அங்கீகாரம்: ரூ. 96 லட்சம் மட்டுமே!

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். மாவட்டத்திலுள்ள (கிளிநொச்சி தவிர்ந்த) பிரதான வீதிகள் பராமரிப்புக்கென பிரதம பொறியியலாளரினால் 1 கோடியே 38 லட்சத்து 13 ஆயிரத்து 400 ரூபா மதிப்பீடுசெய்யப்பட்டிருந்தும், 55 லட்சத்து 84 ஆயிரம் ரூபா மாத்திரமே பிரதமரினால் வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை நிதியிலிருந்து 41 லட்சத்து 14 ஆயிரம் ரூபா பெறப்படவேண்டுமென்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

வீதிகள் பராமரிப்புக்கென அந்தந்த மாவட்ட அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளின்படி யாழ். மாவட்ட அமைச்சருக்கும் மேற்குறிப்பிட்ட நிதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள வீதிகளின் பராமரிப்புக்குஒதுக்கப்பட்ட நிதியை எவ்வாறு பயன்படுத்தலாமென்று பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி யாழ். மாவட்டச் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு தேவ

(8-ம் பக்கம் பார்க்க)

30 அகதிகள் குடும்பங்கள் மலையகம் திரும்புகிறது

[சாவகச்சேரி]

சைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் சுமார் 30க்கும் மேலான மலைக அகதிகள் குடும்பங்கள் தாம் முன்னர் வசித்த இருப்பிடங்களுக்குச் செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இந்தியாவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவந்தபோதிலும் கூட, இன்றைய சூழ்நிலையில் இக்குடும்பங்கள் இந்தியாவுக்குச் செல்வதற்கான சாத்தியக்கூறு

(8-ம் பக்கம் பார்க்க)

போக்குவரத்து விதிகளைமீறும் குற்றத்திற்கு அதிக தண்டனை

அமைச்சரவை தீர்மானம்

[கொழும்பு]

போக்குவரத்து விதிகளை மீறும் குற்றங்களுக்கு அதிக தண்டனை வழங்கப்படவேண்டுமென்று நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளரான கல்வியமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இது தொடர்பாகப் போக்குவரத்துச் சட்டத்தில் விரைவில் திருத்தங்கள் செய்யப்படுமென்றும் அவர் கூறினார்.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

பெரியதம்பிரான் கோவிலடி வண்ணார் பண்ணையில் 5½ பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; து. பத்மநாதன், குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில் மேற்கு, அல்லது K. V. மகாதேவன் சட்டத்தரணி, குரும்பசிட்டி. 177

யாழ்ப்பாணம். கண்டிரோட்டில், அரியாலை ஆரம்பத்தில் திடீரெனப் புதிய ஸ்தாபனம் ஒன்று அமைக்கக்கூடிய சூழ் நிலையில் நவீன மின்சாரவசதிகளுடன் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு;- திரு A. மரியாம்பிள்ளை. இலக்கம். 5, செம். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். 195

யாழ். மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் நெடுங்குளம் ரோட்டில் 25 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. N. ராயப்பு 853, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 196

தாவடி உபதபால் நிலையத்திற்கண்மையில் குடியிருப்பு வசதிக்கேற்ற 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: இ. ஜெயரீரசிங்கம், நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 230

சாவகச்சேரியில் வீடு விற்பனைக்குண்டு. 5 பரப்பு காணியுடன் 6 அறையுள்ள சகல வசதிகளுடன் உள்ள வீடு விற்பனைக்குண்டு. C.R தர்மதுரை மீனாட்சி அம்மன்கோவில் வீதி, சங்கத்தானை. 231

சாவகச்சேரியில் பலாதென்னை பிரயோசனபயிர்களும், சகல வசதியுமுள்ள வீட்டுடன் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: காசிப்பிள்ளை இராமச்சந்திரன் மின்வளவு பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி அல்லது பவளகேசரி மதராஸ் யுவலறிமாட், 264 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 209

Honda C90, C70 Deluxe Choke மொடல் 1980-ம் ஆண்டு மோட்டார் சைக்கிள்கள் 100% மறுசீரமைக்கப்பட்டவை. புதிய பற்றரிகள், ரயர்களுடன் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை உத்தரவாதத்துடன் வாங்கிக்கொள்ளலாம். இல. 5 தேவாலய வீதி, (கிறீஸ்தவகோவிலருகில்) நுணாவில் மேற்கு, நுணாவில், சாவகச்சேரி, (நுணாவில் சந்தியிலிருந்து 2-வது பஸ்தரிப்பிடம்) 208

Bairaha Farm ஒரு நாள் நல்லின பேட்டுக் குஞ்சுகளும் சேவல் குஞ்சுகளும் விற்பனைக்கு உள்ளன. உடன் பதிவு செய்துகொள்ளவும் எஸ் எஸ் சுவாமிநாதன் உடையார் ஒழுங்கை, பழம்றோட் கந்தர் மடம். 226

காணி விற்பனைக்கு

இணுவில் மானிப்பாய் பிரதான வீதியில் வியாபாரகேந்திர ஸ்தானமாகவும் நாற் சந்தியாயும் அமைந்தகாணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:

க. தம்பிராசா
TMR தொழில் நிலையம், தம்பிரத்தின மகால், சுதுமலை, வடக்கு, மானிப்பாய். 181

விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆடியபாதம் வீதியில் (சுப்பிரமணியம்கொம்பனி முன்பாக) இரண்டேகால் பரப்பு காணியும் கிணறு மலசல கூட வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: ரி. எம். கே. கனகரத்தினம், சோதிடர், நல்லூர், யாழ்ப்பாணம். 228

நன்கு தொழில் நடந்துவரும் கிறைண்டிங் மில் விற்பனைக்கு உண்டு. க. கந்தசாமி 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 224

யாழ் நகரில் நல்ல சூழலில் 1 பரப்புக்காணியும், சித்தன் கேணியில் 4 பரப்புக்காணியும், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு ½ மைல் தூரத்தில் 10½ பரப்புக்காணியும் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பொ. சிவபாலன், சட்டத்தரணி, சித்தன் கேணி. 211

தேவை

3 பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு சலவசதியும் உடைய பகுதி வீடு (Annex) யாழ்நகருக்குள்தேவை விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 213 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 213

வயோதிபத்தாயைக் கவனித்து, பராமரிப்பதற்கு அனுபவமுள்ள பெண் உதவியாளர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். அ. இராசரத்தினம், 12, BA. தம்பி ஒழுங்கை யாழ்ப்பாணம். 227

கிறைண்டிங் மில்லில் வேலை செய்வதற்கு ஆண்கள் சீயாக்காய் பவுடர், பற்பொடி பைக்கற் செய்வதற்கு பெண்கள் தேவை. தங்குவதற்கு இட வசதியுண்டு தேவன்ஸ் 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 223

யாழ்ப்பாணத்தில் முன்னணி வகிக்கும் கோழிப்பண்ணை மாட்டுப் பண்ணை ஆகியவற்றை நிர்வாகிக்கக் கூடியவர் தேவை. அனுபவம் உள்ளவராகவும் குண்டசாலையில் பயிற்றப்பட்டவராவும் இருத்தல் வேண்டும் தங்கள் விண்ணப்பங்களை 28 - 1 - 84 க்கு முன்னதாக அனுப்பி வைக்கவும் விளம்பர இல: 225 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 225

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் 1984ம் வருடத்திற்கான சோலைவரி மதிப்பேடுகள்

1984ஆம் வருடத்திற்கான மாநகராட்சி மன்ற சோலைவரி மதிப்பேடுகள் தற்பொழுது ஆயத்தமாக, யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் (சோலைவரிக் கிளையில்) அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதாக (52 ஆம் அத்தியாயமான) மாநகராட்சி மன்ற கட்டளைச் சட்டத்தின் 235(1 ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால அறிவிக்கப்படுகின்றது.

சி. வி. கே. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16 1 84 219

தவறிவிட்டது

16-1-84மாலை 6மணியளவில் யாழ். நகர் பஸ்நிலையத்து கற்றூடலில் எனது அடையாள அட்டை (340 802080 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து தகவல் தரவும் அல்லது ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். வேலுப்பிள்ளை தருமலிங்கம், சாந்தி வோச் வேக்ஸ், 149, கண்டி வீதி, சாவகச்சேரி. போன்: 242 சாவகச்சேரி 220

முதலிலேயே விதிக்கப்பட்ட பூரணதீர்வை அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை
புலோலி தெற்கு சந்தப்பு கிருஷ்ணபிள்ளையின் மரண சாதன சொத்துக்கள் சம்பந்தமாக
—இறந்தவர்

1183 / T

வல்லிபுரம் செல்லையா மகள் சரஸ்வதி தற்போது இராசேந்திரம் பெண் சரஸ்வதி புலோலி தெற்கு, புலோலி.
—மனுதார்

இவ்வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மேலே குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனத்தை ஒப்பேற்றுவதற்காக தாக்கல் செய்யப்பட்டது. எனவே முதலிலேயே விதிக்கப்பட்ட பூரண தீர்ப்பு 1983ம் ஆண்டு கார்த்திகை மீ 21ம் திகதி பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி,
றிச்சேட்ஜெயராசசிங்கம்.
பதிவாளர்.

வரைவு:
இராமசுவாமி சதானந்தன்,
சட்டத்தரணி. 086

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல 84 அ — பிரிவுகள் 524. 532)

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்
திருகோணமலை டைக்வீதி இல. 296 ஐச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திய லிங்கம் கந்தையா என்பவரின் மரணசாதன மில்லாச்சொத்தின் விடயத்தில்,
மரணமெய்தியவர் கந்தையா கைம்பெண் பரஞ்சோதியம்மா 296, டைக் வீதி, திருகோணமலை.
மனுதார்

மரணசாதன) நியாயாதிக்கம்) இல. 569

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1984ம் ஆண்டு தை மாதம் 30ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுமுதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
சி. இராமலிங்கம்,
பதிவாளர்.

1983ம் ஆண்டு மார்கழி மாதம் 20ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது 207

வகுப்பு

Spoken English with Grammer and literature. G C.E. (O/L) (Sylla bus) வகுப்புக்கள் நடைபெறுகின்றன. புதிய வகுப்பு ஆரம்பம் 21-1-84 (3 p m.) நிருவாகி யாழ்ப்பாணக்கல்வி நிலையம் சாந்தி சினிமா அருகாமை. 229

தேவை

வெட்டி எதக்கக்கூடிய நல்ல அனுபவம் உள்ள ரெயிலர் தேவை. சம்பளம் கொமிஷன் அடிப்படையில் அல்லது தினக்கூலி வழங்கப்படும். தொடர்பு: ம. துரைச்செல்வம், செல்வஸ் வீடியோ சென்ரர், மாடிக்கட்டிடம் வல்வெட்டித்துறை. 186

கேள்விப்பத்திர அறிவித்தல்

24 ஸ்ரீ9984- அசோக்லேலண்ட் லொறிக்கு
புதிதாக பொடியடித்து திருத்தவேலை செய்வதற்கான கேள்வி

ஷெ லொறியின் பழைய பொடியை கழற்றிவிட்டு புதிதாக பொடியடித்து, திருத்த வேலைகள் செய்வதற்காக கேள்வி விண்ணப்பங்கள் ஷெ சங்கத்தால் கோரப்படுகின்றன. கேள்விவிண்ணப்பங்களை ரூபா 5/- செலுத்தி தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தவேண்டும். தலைமைக் காரியாலய சோதனையில் மேற்குறித்த லொறியைப் பார்வையிடலாம். விண்ணப்பங்களை 30-01-84ம் திகதிக்கு முன் பதிவுத் தபால்மூலம் "பொதுமுகாமையாளர், வலி-கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "24 ஸ்ரீ 9984 லொறிக்கு பொடியடிப்பதற்கான கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
நீர்வேலி,
1984-01-14. 204

இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் இலவச கண்பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவமும் எதிர்வரும் 18-ம் திகதி புதன் கிழமை மாலை சித்தன்கேணி லயன்ஸ் கழகத்தின் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது, வறிய நிலையிலுள்ள கண்பார்வை குறைந்தவர்களுக்கு இங்கு பிரபல கண்வைத்திய நிபுணர்களால் கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளது.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எஸ் நாகநாதர் தெரிவித்

(7-ம் பக்கம் பார்க்க)

காணவில்லை

இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த சுப்பையா (தொண்டர்) என்பவரைக் காணவில்லை. இவர் கடைசியாக மண்ணிற சாரம் வெள்ளை போர்வை அணிந்திருந்தார். கண்டவர்கள் பின் வரும் விலாசத்துக்குதொடர்பு கொள்ளவும்

சு. சிவராசா,
மஞ்சத்தடி,
இணுவில்.
232

உடன் ஆட்கள் தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள புளோவர் (BLOWERS) கெல்பர் (HELPERS) பபுளர் (BUBBLERS) தேவை.

வேலை பழகுபவர்களும் உடனடியாகத் தேவை.
அனுபவத்திற்கேற்ப நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
உடன் நேரில் வரவும்.

சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி.
(147)

உ

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ருதிரோதிகாரி வருடம் தை மாதம் 8 ம் நாள் (22-01-1984) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6-15 மணி தொடக்கம் 7-30 மணி வரையுள்ள சுபவேளையில்
யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில்

எனது புத்திரன்	எமது புத்திரி
பஞ்சலிங்கம்	தேவகி
அவர்களுக்கும்	அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் திருமணம் நடைபெறும். அத்தருணம் தங்கள் நல்வருகை எதிர்பார்க்கும்

திருமதி	திரு/திருமதி
நா. சின்னையா,	ந. நடேசன்,
24, வேம்படி வீதி,	57, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.	கொட்டடிச் சந்தி,
(216)	யாழ்ப்பாணம்.

கி. ஜேர்மனில் ரஷ்ய ஏவுகணை

இயங்க ஆரம்பம்!

அமெரிக்காவின் நடவடிக்கைக்குபதிலடியாம்

மாஸ்கோ ஜன 18

கிழக்கு ஜெர்மனியில் சோவியத் யூனியனின் அணுசக்தி ஏவுகணை இயங்க ஆரம்பித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஜெர்மனில் அமெரிக்கா தனது அணுசக்தி ஏவுகணைகளை ஏற்கனவே அமைத்து விட்டது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்தே கிழக்கு ஜெர்மனியில் அணுசக்தி ஏவுகணைகளை அமைக்கும் முயற்சியை சோவியத்யூனியன் மேற்கொண்டது.

சோவியத் யூனியனின் இந்த ஏவுகணை இயங்கத் தொடங்கி விட்டதாக சோவியத்தின் உத்தியோக பூர்வ செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' நேற்றிரவு அறிவித்தது.

ஐரோப்பாவில் இரண்டு வல்லரசுகளினதும் ஏவுகணைகள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து உலக சமாதானத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் பலத்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அமெரிக்கா தனது ஏவுகணைகளை ஐரோப்பாவில் நிறுவியதைத் தொடர்ந்தே சோவியதுபதில் நடவடிக்கையாக இந்த முயற்சியில் இறங்கியதாக சோவியத் அறிவித்துள்ளது. (கு)

"உலக அரசியல் காலநிலையை அளவிடும் கருவி ஐரோப்பா"

சோவியத்வெளியுறவு அமைச்சர்கருத்து

மாஸ்கோ, 19

"உலக அரசியல் காலநிலையை அளவிடும் கருவியாக ஐரோப்பா அமைந்துள்ளது" என்று சோவியத் வெளிவிவகார அமைச்சர் திரு. குரோமிகோ கூறினார். சோவியத்துக்கு விஜயம் செய்துள்ள ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் திரு. ஒஸ்கார் பிஸ்செனுக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தின் போது அவர் உரையாற்றினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"மேற்கைரோப்பாவில் நேட்டோ நாடுகளின் மண்ணில் புதிய அமெரிக்க ஏவுகணைகள் நிறுத்தப்படுவதனால் ஐரோப்பிய நிலவரம் உக்கிரமடைந்துள்ளதுடன், நடுத்தர ஏவுகணைகளைக் குறைப்பது குறித்த அமெரிக்க - சோவியத் பேச்சுவார்த்தைகள் முடிந்தும் விட்டன.

"மேற்கைரோப்பிய நாடுகளில் ஏவுகணைகளை நிறுத்திய அமெரிக்காவும் அதன் நேட்டோ பங்காளிகளும். பெரிதாக எதுவும் நடந்து விடவில்லை என்ற ரீதியில் ஐரோப்பிய மக்களுக்குக் காட்ட முயல்கின்றன. அதே வேளையில் சோவியத் யூனியன் மண்டும் பேச்சுவார்த்தைகளுக்கு வர வேண்டும் என்றும் கூறுகின்றன. இரட்டை வேடம் பூண்டு மக்களைத் தவறான வழியில் நடாத்த முயலுகின்றன" (கு)

அமரர் ஸ்ரீபனின் பூதவுடல் சொந்த ஊரில் நல்லடக்கம்!

பெருந்திரளானமக்கள் நேரில்அஞ்சலி

(புதுடில்லி)

காலஞ்சென்ற இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளர் ரி. எம். ஸ்ரீபனின் பூதவுடல் நேற்று முன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கேரள மாநிலத்திலுள்ள அவரது சொந்த ஊரான புதிய காழர் தேவாவய சேமக்காலையில் அவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கேரள முதல்வர் திரு. எஸ். கருணாகரன், ஆளுநர் திரு. ராமச்சந்திரன், இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. கருப்பையா மூப்பனார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

திரு. ஸ்ரீபனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது லட்சக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

"திரு. ஸ்ரீபனின் மறைவால் இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள பெரும் இடைவெளி எத்தனை ஆண்டுகள் சென்றாலும் நிரப்பமுடியாதது என்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (கு)

ரூபவாஹினியில் இன்று

மாலை	
6-00	ஜெர்மன் விளையாட்டுகள்
6-55	செய்திகள் (தமிழ்)
7-15	சிறுவர் இசை நிகழ்ச்சி (சிங்களம்)
8-15	செய்திகள் (சிங்களம்)
8-35	குறுந் திரைப்படம் (சிங்களம்)
9-05	உலக நடனங்கள்
9-30	செய்திகள் (ஆங்கிலம்)
10-00	'வக்னர்' தொலைக்காட்சிச் சித்திரம் தொடர்ச்சி
10-30	உலகச் செய்தி தலையங்கங்கள்
10-35	'வக்னர்' தொடர்ச்சி
10-55	நிகழ்ச்சிகள் முடிவு.

உலகப்பொருளாதாரம் நெருக்கடி நிலையில்!

'அங்டாட்' செயலாளர் கவலை

(கொழும்பு)

உலக பொருளாதாரம் நெருக்கடி நிலைக்கு உள்ளாகி இருப்பதாக அங்டாட் ஸ்தாபன பொதுச்செயலாளர் கலாநிதி காமினி கொரியா கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்தவரான கலாநிதி கொரியா, தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு தாயகம் வந்துள்ளார்.

நேற்று முன்தினம் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் இந்தக்கருத்தைத் தெரிவித்த அவர் இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிறகு தற்போது ஏற்பட்டிருப்பது போன்ற பொருளாதார நெருக்கடி எப்போதுமே ஏற்பட்டதில்லை என்றார்.

இவ்வருட பிற்பகுதில் உலக பொருளாதாரத்தில் அபிவிருத்தி ஏற்படலாம்என்றும்கலாநிதிகாமினிகொரியாநம்பிக்கை தெரிவித்தார். (கு)

குரோஸ் ட்ரவல் சேர்விஸஸ்
CROSS TRAVEL SERVICES (PTE)
லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்

மற்றுமோர் புதிய முயற்சி
"CROSS TECHNICAL SERVICE"
குரோஸ் டெக்னிக்கல் சேர்விஸ்

திருவாளர் C. V. K. சிவஞானம் அவர்களால்
மங்களகரமாக இன்று வியாழக்கிழமை தை மாதம் 1984-ம் ஆண்டு (19-01-84) முற்பகல் 9 மணிக்குத் திறந்துவைக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும், நண்பர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
அத்தருணம் எமது வர்த்தக நிலையத்திற்கு [வருகை] தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

★ MENOLTA போட்டோஸ்ரற் கொப்பி மெஷின்கள் ★ MENOLTA கமராக்கள் மற்றும் மின்சார உபகரணங்களின் ஏக விநியோகஸ்தர்களான
குரோஸ் டெக்னிக்கல் சேர்விசில்
★ NATIONAL குளிர்சாதனப் பெட்டிகள் ★ BLACK AND WHITE COLOUR T. V. தொலைக்காட்சிப் பெட்டிகள் ★ றேடியோக்கள் ★ கார் றேடியோக்கள் ★ VEDIO ★ GAS COOKERS ★ ELECTRIC COOKERS ★ எல்லாரக மின் விசிறிகளும், மின் கேற்றல் ★ SPEAKERS ★ AMPLIFIERS ★ DINNER SETS ★ PYREX ★ CORRELLE ★ HAIR DRIER ★ PHOTOSTAT PAPER இன்னும் பல வீட்டுப்பாவனைப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வருக, வருகை தருக.

CROSS TECHNICAL SERVICE
Stage II, First Floor,
NEW BUS STAND CENTRE ROAD, JAFFNA.

'பதிவேடுகளில் இருவேறுபட்ட குறிப்புகள் காணப்பட்டன'

மண்டைதீவு கொலைவழக்கில் சாட்சியம்

(நல்லூர்)

"கொலையுண்டவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது தொடர்பான பதிவுகளில் இருவேறுபட்ட குறிப்புகள் காணப்படுகின்றன. கார்விபத்தில் சம்பந்தப்பட்டதாக முதற்குறிப்பிலும், புஷ்பராசா என்பவர் காலால் உதைத்ததாக இரண்டாவது குறிப்பிலும் காணப்படுகிறது" மண்டைதீவு கொலைவழக்கு விசாரணை யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஐ. ஜே. ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்றபோது இத்தகவல் வெளியானது.

இவ்வழக்கில் மண்டைதீவில் முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா தனுசிங்கம் என்பவரை 1979 ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தன்று கொலைசெய்ததாக கனகசபை பரமேஸ்வரன் அல்லது புஷ்பராசாவுக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அரசதரப்பில் அரசசட்டத்தரணி ஐயாத்துரை ஞானதாசனும் எதிரி தரப்பில் சட்டத்தரணிகள் ஜிம்மி இராசரத்தினம், கே. யோகசுந்தரம் ஆகியோரும் ஆஜராகி இருந்தனர். மேல்நீதிமன்ற முதல்யார் சுப்பையா இராசலிங்கம் இறந்தவரின் ஆஸ்பத்திரி படுக்கைத் தலைமாட்டு டிக்கட்டினை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். அரச சட்டத்தரணி ஐ. ஞானதாசனின் நெறிப்படுத்தலின் கீழ்சாட்சியம் அளித்த வைத்திய கலாநிதி திருமதி கலைவாணி தியாகராசா பின்வருமாறு கூறினார்.

"காலமானவர் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு 79-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி இரவு 11-20 மணிக்கு கொண்டு வரப்பட்டபோது நான் வெளி நோயாளர் பகுதியில் கடமை ஆற்றிக் கொண்டிருந்தேன். அன்று மாலை ஆறுமணியளவில் தான் கார்விபத்தொன்றில் சிக்கியதாக அவர் என்னிடம் கூறினார். அவருடைய கூற்றினை உரிய பத்திரத்தில் பதிந்தேன். அவர் அறிவுடன் இருந்தார். கதைக்கக் கூடிய நிலையில் இருந்தார்"

அடுத்து சாட்சியமளித்த யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் மருத்துவ கலாநிதி என். சரவணபவன் காலமானவரின் உடலிற் காணப்பட்ட காயங்கள் ஒருவரி உதைத்ததால் ஏற்பட்டிருக்கலாம். அல்லது ஒரு மழுங்கிய ஆயுதத்தின் ஒருபகுதியின் பாதிப்பினால் ஏற்படவும் சாத்தியம் உண்டு என்று கூறினார்.

மாத்தளை அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் மை. கணேசரட்னம் சாட்சியமளிக்கையில் காலமானவரை பரிசோதித்தேன் அவருடைய படுக்கைத் தலைமாட்டு டிக்கட்டில் "புஷ்பராசா என்பவர் அவருக்குக் காலால் வயிற்றில் உதைத்ததாக ஒரு குறிப்பு இருந்தது. அவருடைய உடல் ஊதி நஞ்சேறிய நிலைக்குரிய அறிகுறிகள் காணப்பட்டன

(7-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

நல்லதைச் செய்ய விரும்புகிறவர்கள் சுயநலம் உள்ளவர்கள் அல்ல; அவர்களுக்குப் பரபரப்பில்லை; மக்களிடத்தில் நன்மை தோன்றும்படி செய்வதற்கு நாளாகும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்

— மகாத்மா காந்தி

நமது நோக்கு

தேவை:

மர்மம் அல்ல; தர்மம்

பொதுமக்கள் முட்டாள்கள் என்ற நம்பிக்கையில் பத்திரிகைச் செய்திகள் இடம் பெறுவதை பொதுமக்கள் சார்பில் நாம் கண்டிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

ஒரு பத்திரிகை மாநாட்டில் ஆங்கிலத்தில் உரையாடுவது அவசியமாக இருந்ததால் பொதுமக்கள் 'gullible' என்ற ஆங்கிலப் பதத்தை உபயோகிக்க நேரிட்டது.

மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய பத்திரிகைச்சபைத் தலைவர் ஒரு சிங்களப் பெருமகன் அந்தச் சொல்லைக் கேள்விப்பட்டதாகவும் அதன் சரியான கருத்து தெரியாததாலும் அதனை விளக்குமாறு கேட்டார்.

கேட்டது மட்டுமல்ல அருகிலிருந்த கரும்பலகையில் எழுதும்படியாகவும் கோரினார்.

அதன் ரகசியம் என்னவாயிருக்கலாமென்று எமக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் அவர் அதனைச் சபையோருக்கு வெளிப்படுத்தியபோது செய்தித் தாளின் அடிப்படை அமைப்பை விளக்க அந்த ஆங்கிலச் சொல்லைப்போல் சிங்களத்தில் எதுவும் உறைப்பாகவில்லையென்றார். பத்திரிகையின் பரபரப்பான செய்தியை வாசகர்கள் இலகுவில் நம்பிவிடுவார்கள் என்பதைவிளக்க இச்சொல் உதவும்.

சபையில் இருந்த தமிழ் பத்திரிகையாளர் எல்லோரும் ஆங்கிலம் தெரிந்தவர்கள். சொல்லோசைக்கும் கருத்துச் சிறப்புக்கும் இச்சொல்-gullible-மிகச்சிறந்ததென ஒப்புக்கொண்டனர்.

எந்த ஒரு செய்தியிலும் மர்மம், துப்புத்துலக்கு, துப்பாக்கி நாடகம், வரலாறு காணாத வங்கிக் கொள்ளை போன்ற தலையங்கங்கள் செய்தியைத்தேடித் தவிக்கும் ஆத்மாக்களுக்கு ஆறுதல் அளிப்பன.

இவைதானும் தேய்ந்து போக வேறு உத்திகள் கண்டுபிடிப்பது பத்திரிகையாளர்களின் தொழிலென்றால் அது தவறாகாது

'விசர்நாயைக் துரத்திக் கடித்தமனிதன்' என்றதலைப்பும்இன்று தேய்ந்துபோய் விட்டதைநாமறிவோம்.தினசரித்தாள் விலைப்பட வேண்டும்; அதற்கேற்ற வண்ணம் செய்தி, உண்மையில் புதினமாகவிருக்க வேண்டும். வாசகர்களின் ஆவேச விடயங்களுக்கு விடாய் தீரும் வகையில் அமைய வேண்டும்.

ஆனால் குறிப்பிட்ட ஒரு விடயம் எவ்வாறுதொடர்கிறது என்ற அடிப்படைக் கேள்விக்கு விடை பொருத்தமாக இருக்க வேண்டும். மர்மக்கொலை அல்லது வரலாறு காணாத வங்கிக் கொள்ளை வேறு; உண்ணாவிரதம் வேறு.

இனந்தெரியாத கிலரால் ஒன்பது உண்ணாவிரதிகளும் கடத்திச் செல்லப்பட்டுவிட்டனர். இதன் உண்மையை எவரும் சந்தேகிக்கவில்லை; அவர்கள் உயிருக்கு ஆபத்து இருக்க மாட்டாது என்பதும் பகுத்தறிவுக்குப் பொருத்தமானது.

இதனை ஒரு மர்ம நாடகமாக்கி நூற்றுக்கணக்கான கேள்விகளை எழுப்பி, விடயத்தை பிரபலப்படுத்தி திசைதிருப்புவது. இன்றைய குழப்பமான நிலையில் அமைதிக்குதவாது. வாசகர்களின் எண்ணங்களுக்குவழிகாட்ட வேண்டிய பொறுப்பு எமக்குண்டு.

ஆண்டவனே! அபாயத்தை நாடிக் கொண்டிருந்த மாணவர்கள் அந்த நிலையிலிருந்து நீக்கப்பட்டனர்; மக்கள் வெள்ளம் சட்டென வடிந்தது; ஒரு பெரும் நெருக்கடி தற்காலிகமாக ஆவது அமந்துவிட்டது என்பதை யார் மறுப்பார்? போராட்டம்தொடர வெற்றிபெற வேறு வழிகள் உண்டு.

பகுத்தறிவுடையவர்களே பத்திரிகை வாசகர்கள் என்பது கோட்பாடு; எதனையும் நம்பும் மூடர் இல்லாமலில்லை; அதுமட்டுமல்ல விவேகிகளே இக்குறைபாட்டுக்குச் சில வேளையில் பலியாகின்றனர். ஆனால்அதனை வளர்ப்பது தர்மம் அல்ல.

எந்த விடயத்திலும் மர்மத்தையல்ல தர்மத்தையே காண முயல வேண்டும். அதற்கு அமையும் செய்திகள் அனைத்தும் வாசகர்களின் அறிவுத்திறனைவிருத்தி செய்யும். மர்மம் தவிர்க்கப்படவேண்டுமென்பதல்ல; அதற்குரிய இடமறிதல் முக்கியமென்பதே.

உண்ணாவிரதம் ஜனாதிபதியின் கவனத்துக்கு எட்டிவிட்டது; பல்கலைக்கழக மாணவர் குழுவைச்சந்திக்க அவர் விரும்பியதும் விடயத்துடன் தொடர்பான செய்தி.

மாணவர்களை யார் கடத்தினார்கள்? மாணவர்-ஜனாதிபதி சந்திப்பை யார்ஒழுங்கு செய்தார்கள்? இவையெல்லாம் நாமறிய வேண்டியவைதான்; ஆனால் இந்தப் பிரச்னைக்கு தீர்வுகாண இச்சந்திப்பு உதவ வேண்டுமென்பது மிக முக்கியம். அதற்கு முக்கியத்துவம் அளிக்கும் அதுபோன்ற தொடர்பான செய்திகளே ஆக்கபூர்வமானவை.

மஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமிகோவிலில் தைப்பூச மஞ்சத்திருவிழா இன்று வியாழக்கிழமை நண்பகல் விசேட அபிஷேகமும் இணுவில் கந்தசுவாமிகோவில் புதுக்கிய சரித்திரப்பிரசித்தி பெற்ற திருமஞ்சத்தில் ஷண்முகப்பெருமான் வீதிவலம் வரும் அற்புதக்காட்சி பிற்பகலும் இடம்பெறும்.

பல தலங்களுக்கும் உரிய தைப் பூசவிழா

தைபிறந்தும் தேவர்களுக்குப் பகற்காலமாகிய உத்தராயணம் ஆரம்பமாய்விடுகின்றது. உத்தராண காலத்தில் முதலாவதாக வரும் சிறந்த புனிதநாள் தைப் பூசம் எனலாம்.

விநாயகசதுர்த்தி, சிவராத்திரி முதலியனபோல குறிப்பிட்ட ஒரு தெய்வத்திற்கே உரிமையானதென்றில்லாமல் பொதுவான, சிறப்பான தினம் தைப்பூசம் ஆனதால் இத்தினத்தில் சிவாலயம், அம்பாளாலயம், முருகராலயம் முதலிய எல்லாக்கோவில்களிலும் விசேட வழிபாடு, விழா என்பன நிகழும்.

யாழ்ப்பாணத்தின் பிரதான சிவாலயங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் ஈழத்துச் சிதம்பரமாகிய காரைநகர் சிவன் கோவிலில் இத்தினம் ''புதிதெடுத்தல் விழா''வாகக் கொண்டாடப்படுகின்றது சிவபெருமான் ஆலயத்திலிருந்து நெடுந்தூரத்திலுள்ள ஆலயத்துக்குச் சொந்தமான நெற்காணிக்குச் சென்று நெற்கதிர்களைக் கொய்துகொண்டு திரும்பியருள்வார். வயலுக்குச் சென்று திரும்பும் வழியிலுள்ளவர்களுக்குச் சுவாமி புறப்பாடு பெருஞ்சிறப்பையும் மகிழ்வையும் கொடுப்பதாயமையும். நெல் விளைவுக்குக் காரணமாக சூரிய பொங்கலுக்குப்பின் உலகமாதா பிதாக்களான சிவமும்சக்தியும் விளைந்த நெல்லை உண்ண வழிவகுக்குப்பதிலும் அழகு ஒன்று இருக்கிறது.

தைப்பூசத்திலன்றே நயினை நாகபூஷணி அம்பாளுக்குக் கைலாசவாகன த்திருவிழா நடைபெறுகின்றது. கடல் சூழ்ந்த உலகில் வாழ்பவர்களுக்கு அருளெனக் கடல் நடுவில் இருக்கும் அம்பிகை மலைமீது காட்சி கொடுக்கும் விழா; தைப்பூசத்தில் அமைவதிலிருந்தும் தைப்பூச மகிமையையும் சிவசக்தியின் கருணையையும் உணரலாம்.

யாழ்ப்பாண மக்களின் குலதெய்வமாகியும், செந்தமிழ், தனித்தனி தெய்வமாகவும், கலியுகவரதனாகவும் மக்களின் உள்ளம் கவரும் குழந்தைத் தெய்வமான, முருகப்பெருமானுக்கும் தைப்பூசம் சிறப்புடையதாகக் காணப்படுகின்றது.

இத்தினத்தில் நல்லூர்க் கந்தசுவாமியாரும், இணுவில் முருகப்பெருமானும் மஞ்சத்தில் புறப்பட்டு அடியார்களுக்குக் காட்சி கொடுத்து அருள் புரிவர். மாவைக்கந்தனுக்கு நடைபெறும் இலட்சார்ச்சனை தைப்பூசத்தன்றே பூர்த்தியடைகின்றது. அன்று முருகன் தேரேறி அருள் பொழியும் விழா மாவைக்கந்தனின் கருணை மக்களுக்குக் கிடைக்கச் செய்கின்றது.

சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் முதன்முதல் நடனமாடியது தைப்பூசமும் குருவாரமும் சித்தயோகமும் கூடிய நடுப்பகல் பொழுதில் என்பர். சிதம்பரத்தில் தைப்பூசத்தன்று 10 தீர்த்தங்களும் உள்ள இடத்திற்குச் சுவாமி எழுந்தருள்வார். பல மைல்கள் தூரத்திற்கு சுவாமி சென்றாலும் விழாவாக இது அமையும்.

சோழநாட்டின் மூலஸ்தானமாக விளங்கும் திருவிடைமருதூரிலும்; இராமலிங்க சுவாமிகள் நிறுவிய வடலூர் சத்தியஞான சபையிலும் தைப்பூசமே பெருநாளாக விளங்குகின்றது.

திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்க அருளிய பதிகத்தில் தைப்பூச நாள் அடியார்க்கு அமுதூட்டி வணங்கும் திருநாள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்படியாகப் பல சிறப்புக்களுக்கும் உரிய புண்ணிய நாளை ஒவ்வொருவரும் தம் இயல்புக்கு ஏற்ப பயன்படுத்தல் நன்று; அவசியம்.

—அருளாளன்

யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி முகாமையாளர்க்கு நடைமுறைகள் பற்றி விளக்கம்

(மாவிட்டபுரம்)

யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி கிளைகளின் மனேஜர்கள் உதவி மனேஜர்கள் ஆகியோருக்கான வங்கி நடைமுறைகள் பற்றிய மூன்று நாள் கருத்தரங்கொன்று காங்கேசன்துறை ''ஹாபர் வியூ'' ஹோட்டலில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் வங்கி மூலமானகடன் வசதிகள் பற்றி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இலங்கை வங்கி கொழும்பு தலைமையக பிராந்திய முகாமையாளர்கள் திரு. கே. சிவகணநாதன், திரு. கி. கே. குணநாயகம் ஆகியோரும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இலங்கைவங்கி வடபிராந்திய உதவி பொதுமுகாமையாளர் திரு. டி. அத்தநாயக்கா, உதவி பயிற்சி பொதுமுகாமையாளர் திரு. டி. பொடிங்கொட, சர்வதேசபிரிவு முகாமையாளர். திரு. ஏ. கதிரவேல்பிள்ளை, யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. கி. ஸ்ரீரங்கநாதன் ஆகியோர் இக்கருத்தரங்கில் கருத்துரை வழங்கினர்.

பரமனே போற்றி

ஆடக அரசே போற்றி
ஆதிரை நாத போற்றி
ஏடக மலரான் போற்றும்
எந்தனே ஈசா போற்றி
பாடகம் தண்டை பாடும்
பாதனே பரனே போற்றி
நாடகம் எல்லா மாகும்
நாதனே போற்றி போற்றி

சிதம்பரந் தன்னி லாடும்
சிதம்பர நாத போற்றி
நிதம்பல காட்சி நல்கும்
நிர்த்தனே நிமலா போற்றி
மதம்பொழி கருணை வள்ளல்
மதகளி றன்னாய் போற்றி
பதம்பல அளிக்க வல்ல
பரமனே போற்றி போற்றி

பொற்சபை தன்னி லாடும்
பொறிபுறு பாத போற்றி
சிற்சபை தன்னி லாடும
சிறிதரன் பாகா போற்றி
முற்சபை தன்னி லாடும்
முயலகன் பாதா போற்றி
எற்குறை தீர்க்க வந்த
ஏந்தலே போற்றி போற்றி

வெள்ளியம் கிரியின் மேய
விமலனே போற்றி போற்றி
வெள்ளியம் பலத்தி லாடும்
விகிர்தனே போற்றி போற்றி
அள்ளியம் கருணை நல்கும்
அண்ணலே போற்றி போற்றி
தெள்ளிய நஞ்சம் பூண்ட
தேவனே போற்றி போற்றி

முருகவே. பரமநாதன்

அம்பிகை வழிபாடு

[சுழிபுரம்]

''அம்பிகை வழிபாடு செய்பவர்களுக்கு அருமருந்து அபிராமியந்தாதி தினமும் ஓதிவருபவர்கள் வாழ்வு பலவகையிலும் சிறப்புடையதாக அமையும். எல்லாவகையான நன்மைகளையும் தருபவர் அன்னையே ஆகவே நாம் அபிராமியந்தாதி ஓதிதினமும் அம்பிகையை வழிபடுவோம்.

இவ்வாறு வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெற்ற அபிராமியந்தாதி வழிபாட்டில் கலந்து 'பாட்டும் பயனும்' செய்த சைவமணி சி. மருதபிள்ளை ஆசிரியர் பேசுகையில் குறிப்பிட்டார்.

''இறைவன் அருளவேண்டும்''

(சுழிபுரம்)

''இல்வுலகில் நாம் இன்பமாக வாழ இறைவன் எமக்கு நல்ல எண்ணத்தை மட்டும் தரவேண்டும். நாம் வணங்கும் போது உள்ளம் நல்லதையும் தீயதையும் நினைக்கின்றது. தீயஎண்ணத்தை அறவே மறக்கச் செய்யவும் அத்தோடு பிறரின் குறையைச் சுட்டிக் காட்டி பேசுவதை நிறுத்தி நல்லதை மட்டும் பேசுவதற்கும் எண்ணுவதற்கும் உரிய எண்ணத்தை இறைவன் தரவேண்டும்''

இவ்வாறு ஆசிரியர் திரு. இ. அப்பாத்துரை பண்ணாகம் சதசங்க வட்டத்தினர் நடாத்திய இல்லக் கூட்டுப்பிராத்தனையில் குறிப்பிட்டார்.

பொலிஸ் பொதுமக்கள் தொடர்பு சபை

[பண்டத்தரிப்பு]

மாதகலில் பொலிஸ்-பொதுமக்கள் தொடர்புச் சபையொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மாதகல் இளைஞர்சங்க மண்டபத்தில் மாதகல் கிராம சேவை அலுவலர் திரு. வி. பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற இச் சபையின் அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டத்தில் முன்னாள் கிராமோதய சபைத் தலைவர் திரு. எம். பாலசிங்கம் தலைவராகவும், திரு. சி. நடராஜா செயலாளராகவும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். ஏழு உறுப்பினர்களைக் கொண்டசெயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வட்டு. மாதிரிக் கிராம திட்டம் கைவிடப்பட்டது!

(பண்டத்தரிப்பு)

கிலலாலை, சாந்தையில் நிறுவுவதற்கு திட்டமிட்டிருந்த வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான மாதிரிக் கிராமம் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டஇந்த மாதிரிக் கிராமத் திட்டம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக கொழும்பிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைமை அலுவலகம் யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு அண்மையில் அறிவித்திருப்பதாக அறியப்படுகின்றது.

இதனை அடுத்துமாதிரிக்கிராமம் அமைப்பதற்கென சாந்தைக் கிராமத்தில் ஏற்கனவே பறிக்கப்பட்டிருந்த கற்கள், மணல், சீமெந்து ஆகிய பொருட்கள் மீண்டும் வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்படவிருப்பதாகவும் தெரிய வருகின்றது. கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்த வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி அமரர் த. திருநாவுக்கரசுவினால் சிபார்சு செய்யப்பட்ட இந்த வட்டுக் கோட்டைத் தொகுதிக்கான மாதிரிக்கிராமத்திட்டத் திற்கென தனியாருக்கு சொந்தமான காணிகள் பல நில அளவைத் திணைக்களத்தினரால் அளக்கப்பட்டு அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டன. ஆனால் இதுவரை அக்காணிகளுக்கு உரிய நஷ்டஈடுஎதுவும் வழங்கப்படவில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. சுவீகரிக்கப்பட்டகாணிகளின் சொந்தக்காரர்களில் சிலர் அக்காணிகளில் நெல் விதைத்திருப்பதுடன் வெங்காயச் செய்கையிலும் ஈடுபட்டுள்ளது. குறிப்பிடத்தக்கது.

கடந்த 1983 ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கிடையில் இத்திட்டம்நடைமுறைப்படுத்தப்பட நவறியமைக்காகவே மாதிரிக் கிராமம் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டு ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டம் ரத்துச் செய்யப்பட்டிருப்பது குறித்து இப்பகுதி மக்களிடையே குறிப்பாக வீடுகள் பெற தெரிவு செய்யப்பட்டிருந்தவர்களிடையே பலத்த ஏமாற்றமும், அதிருப்தியும் கவலையும் ஏற்பட்டுள்ளது.

இளைஞர் விடுதலை

(சுண்டிக்குளம்)

கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடிச் சந்தியில் ஆயுதப் படையினரின் சோதனையின் போது இயக்கம்ஒன்றின் பெயருள்ள கலண்டர் வைத்திருந்த இளைஞர் விசாரணையின் பின்பு விடுவிக்கப்பட்டார்.

யாழ்ப்பாண நகரிலுள்ள பிரபல கல்லூரிஒன்றின் மாணவரான இவர் கரவெட்டி துன்னாலையைச் சேர்ந்தவர்.

அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத்தில் அடிக்கல் நாட்டும் விழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனையொட்டி அன்று விசேட பூசையும், நிகழ்ச்சிகளும், ஆகிரியர் சிவ. மகாலிங்கத்தின் சிறப்புச்சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது

0 0 0

(புலோலி)

மேலைப்புலோலிச் சதாவதானி கதிரவேற்பிள்ளை ஞாபகார்த்தமாக சுமார் 7 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மணிமண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூகநிலையத் தலைவர் திரு. மு. பொ. வீரவாகு இம் மணிமண்டபத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைப்பார்.

அன்றையதினம் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய பொதுக்கூட்டமும் நடைபெறுமென நிலையச் செயலாளர் திரு. கே. தங்கராசா தெரிவித்தார். (வெ)

தந்தையும் மகனும் ரயிலுக்குப் பலி!

(இரா. உதயகுமார்)

பாதுகாப்பற்ற ரயிலேவு கடவையில் மோட்டார் சைக்கிளில் சென்ற தந்தையும் மகனும் பரிதாபமாக ரயிலுடன் மோதுண்டு நேற்றுக் காலை மரணமானார்கள்.

வாழைச்சேனை இலங்கை வங்கிக்கிளையில் முகாமையாளராகக் கடமையாற்றும் க. பாக்கியராஜா (42 வயது) என்பவரும், அவரது ஜெயகிருஷ்ணன்என்ற எட்டு வயது மகனுமே இவ்வித ரயில் விபத்தில் கிக்கி கோரமாகப் கோரமாகப் பலியுண்டவர்களாவர்.

ஒட்டுமாவடியிலுள்ள பாதுகாப்பற்ற ரயிலேவு கடவையைமோட்டார்சைக்கிளில் நேற்றுக் காலை 7-50 மணிக்குக் கடந்தபோதே இவ்விபத்து நடந்தது.

மட்டக்களப்பிலிருந்து மாகோவுக்குச் சென்ற சரக்கு ரயில் வண்டியில் இவர்கள் மோதுண்டார்கள்.

மட்டக்களப்பு கல்லடி வாசியான இறந்தவருக்கு இரண்டு பிள்ளைகள்.

மரணவிசாரணையை திரு. காரளசிங்கம் நடாத்தினார். விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

அச்சு ஆரோகண வைபவம்

(யாழ்ப்பாணம்)

இருபதுலட்ச ரூபா செலவில் நிர்மானிக்கப்படவிருக்கும், திருநெல்வேலி சிவன்கோவில் சித்திர தேருக்கான அச்சு ஆரோகண வைபவம், நாளைக் காலை மேற்படி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்திற்குதிருப்பணிச் சபைத் தலைவர் சட்டத்தரணி திரு சி. நாகராசா தலைமை தாங்குவார். இன்றைய வைபவத்தில், சிவத்தமிழ் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டியும், தொழிலதிபர் திரு. க. கனகராஜாவும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார். (கெ)

கூட்டுறவு மகளிர் குழு பயிற்சிக் கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த கூட்டுறவு மகளிர்குழுக்களின் பிரதிநிதிகளுக்கான இருநாள் வேலைக்கள செய்முறைப் பயிற்சிக் கருத்தரங்கு சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். தேசிய கூட்டுறவுச் சபையின் ஆதரவில் நடைபெற்ற இந்த பயிற்சிக் கருத்தரங்கில் போஷாக்கு உணவு வகைகள் தயாரித்தல், கோலம்போடுதல் சிகை அலங்காரம், முகஅலங்காரம் ஆகிய பல்வேறு செய்முறைப் பயிற்சிகள் இடம் பெற்றன. இதில் பிரதம அதிதிகளாக அகில இலங்கை கூட்டுறவு மகளிர் குழுக்களின் தலைவி திருமதி சந்திரா கருணரத்தினவும், கூட்டுறவுத்துறை கல்வித்திட்டப் பணிப்பாளர் திருமதி ஜயந்தா முல்லோமுலவும் கலந்துகொண்டனர். திருமதி ஜயந்தாமுல்லோமுல தம்பதிகளுக்கு வரவேற்பு உபசார வைபவம் ஒன்றும் நடாத்தப்பட்டது. யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா, யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம், பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க கல்வி உத்தியோகத்தர் திரு. சி. நடராசா ஆகியோர் இதில் கலந்துகொண்டு பாராட்டுரை நிகழ்த்தினார்கள்.

திருட்டுச் சம்பவங்கள்

13வயதுசிறுவன்றிமாண்டில்!

(மாவிட்டபுரம்)

திருட்டுச்சம்பவங்கள் தொடர்பாக கைதான 13 வயதுச் சிறுவன் ஒருவன் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

குரும்பசிட்டி, கட்டுவன் பகுதியில் இடம் பெற்ற சில திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக குரும்பசிட்டியைச் சேர்ந்த 13 வயதுச் சிறுவன் ஒருவனை கைதுசெய்த காங்கேசன்துறைப் பொலிசார் அச்சிறுவன் மூலம் திருட்டுப்போன பணம் கசெட்டுகள் போன்றவற்றை கைப்பற்றியிருந்தனர்.

இச்சிறுவனை மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிசார் ஆஜர் செய்த சமயம் றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் உத்தரவிட்டார்.

கிராமத்தின் வளர்ச்சியில் சனசமூக நிலையங்கள் பங்கு

(மாவிட்டபுரம்)

"ஒவ்வொரு கிராமங்களிலும் இயங்கும் சனசமூக நிலையங்கள் அக்கிராமத்தின் பல்வேறு தேவைகளையும் நிறைவேற்றிவைக்க முன்வரவேண்டும். கிராம அபிவிருத்தி, சமூக ஒற்றுமை, பொதுநலத் தொண்டு போன்றவற்றில் சனசமூக நிலையங்கள் மிகவும் அக்கறையுடன் செயல்பட வேண்டும்".

இவ்வாறு மாங்கொல்லை இளைஞர் முன்னேற்ற மன்ற சனசமூகநிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலையமண்டபத்தில் நடைபெற்ற சமயம் அதில் பிரதம அதிதியாகக் கலந்துரையாற்றிய யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ செயலாளர் திரு சி. வரதராஜா கூறினார்.

நிலையத்தலைவர் திரு சி. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

யாழ். மாவட்டத்தில் சில சனசமூக நிலையங்கள் சிறப்பாக இயங்குகின்றன. ஆனால் சில சனசமூகநிலையங்கள் பெயரளவில் மட்டும் இயங்கி அரசாங்க நன்கொடையை மட்டும் பெற்று வருகின்றன. சில சனசமூக நிலையங்கள் ஆட்டுக் கொட்டில்களாகவும், மதுபானசாலைகளாகவும் மாறி வருகின்றன. இது மிகவும் வேதனைக்குரியது.

சனசமூக நிலையங்கள் கிராமத்தில் அளப்பரிய பணிகளைச் செய்யமுடியும், விளையாட்டுத் துறையில் ஆற்றல்களை வளர்க்

(8-ம் பக்கம் பார்க்க)

ரூபா 5 லட்சம் செலவில் உபமின்நிலையம்

(பண்டத்தரிப்பு)

இலங்கை மின்சார சபை காலையடி முருகமூர்த்தி கோவிலடியில் சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் உபமின்நிலையம் ஒன்றை நிறுவியுள்ளது. இதுவரை மக்கிய மின் ஒளியில் சிரமம் அனுபவித்துவந்த பணிப்புலம், வடலியடைப்பு, செட்டிகுளுச்சி ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு இந்த உபமின் நிலையம் இயங்க ஆரம்பித்தவுடன் பூரணமான மின் வெளிச்சம் கிடைக்குமென்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் காலையடி தெற்குப்பகுதிக்கும் புதிதாக மின் விநியோகம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. காலையடி தெற்குப் பகுதியில் மின் இணைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பதவி உயர்வுடன் இடமாற்றம்

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை தபால் அலுவலகத்தில் உதவி தபால் அதிபராக 4 வருடங்கள் கடமைபுரிந்த திரு. க. மகாலிங்கம் கோல உடைப்பரி சோதகர் (ஐ. பி ஆர்) பதவி உயர்வுடன் மன்னாருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

பண்டத்தரிப்பு)

கண்டி அரசினர் வைத்திய சாலையில் பல்வைத்திய உத்தியோகத்தராக கடமையாற்றிய டாக்டர் (திருமதி) இராஜினி அரியரத்தினம் இம்மாதம் முதல் காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

அலங்கார உற்சவம்

[பண்டத்தரிப்பு]

ஓட்டிசுட்டான் கற்சிலை மடு சின்னக்குளம் அரசடி விநாயகராலய வருடாந்த அலங்கார உற்சவம்இம்மாதம் 11-ம்திகதிஆரம்பமாகியுள்ளது

புதிய உதவி அரசாங்க அதிபர்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் புதிய உதவி அரசாங்க அதிபராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலரத்தினம் பதவி ஏற்றுள்ளார். சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு. அ. அருஞ்சலம் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். (சூ)

வடபகுதி விவசாயிகளுக்கு

கிழங்குச் செய்கையால் பெருத்த நஷ்டம்!

(நீர்வேலி)

வடபகுதியில் இவ்வருடம் தரமிலாதநோய்வாய்ப்பட்ட விதை உருளைக்கிழங்கை விநியோகித்ததன் மூலம் கிழங்குப் பயிர்ச் செய்கை அழிந்துவிட்டது. இதனால்பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்து மீளாத நஷ்டத்தில் ஆழ்ந்தப்பட்டுள்ளார்கள். வடபகுதி விவசாயிகள், தரமற்ற நோய் வாய்ப்பட்ட உள்ளூர் விதை உருளைக் கிழங்கை வடபகுதி விவசாயிகளுக்கு கூடுதலான விலைக்கு கண்டிஅடித்து நஷ்ட வாழியாக்கியது திட்டமிட்ட செயல்.

கோப்பாய் கிருஷ்ணன் கோவிலடியில் நடைபெற்ற

(7-பக்கம் பார்க்க)

BREMA VIDEO CLUB

பிறிமா வீடியோ கிளப்

19-1-84 வியாழன்(இன்று)பலாலிரோட்,கோண்டாவில்(சந்தி)

காலை 6½ முதல் 9½ வரை உள்ள சுபமுகூர்த்தத்தில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட

பிறிமா வீடியோ கிளப்

ன் தாபனத்தை

திரு. செ. சற்குணானந்தன்

(உரிமையாளர், வீனஸ், நியூவீனஸ், டிக்கா வாச் வேக்ஸ்)

அவர்களால் திறந்து வைக்கப்படும்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்

அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

T. V. டெக் தரமான திரைப்பட கசற்

வாடகைக்கு விடுபவர்கள்.

வீடியோ படப்பிடிப்பு, ஸ்ரீயோ ஒலிப்பதிவு செய்து கொடுப்பவர்கள்.

T. V. அன்ரனா பொருத்துதல், கைக்கடிகாரம், றேடியோ T. V. திருத்துவதில் அனுபவம் பெற்றவர்கள்.

உரிமையாளர்கள்.

(234)

நீதிமன்ற அவதூறு வழக்கு: எதிரி குற்றவாளியாக தீர்ப்பு

(நமது நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தை அவமதித்தது சம்பந்தமான வழக்கில் விசாரணை முடிவில் யாழ்ப்பாணமாவட்ட மேலதிக நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டுள்ளார்.

இவ்வழக்கில் 79ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் திகதி ஒரு வழக்கு விசாரணை நடைபெறுகையில், யாழ்ப்பாணமாவட்ட நீதிமன்றத்தை அவமதித்ததாக ப. ஜோதி என்பவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அரசதரப்பில் அரச சட்டத்தரணி கே. செல்வஸ்கந்தன் ஆஜராகி இருந்தார்.

எதிரி ப. ஜோதி சம்பவம் நடைபெற்ற வேளையில் தனது நடத்தையின் மூலம் நீதிமன்றத்தை அவதூறு செய்யும் நோக்கத்தையோ அன்றி நீதிமன்ற அதிகாரத்தை மீறும் எண்ணத்தையோ கொண்டிருக்கவில்லை என்றார்.

தனக்கு உரிய சட்ட ஆலோசனையைப்பெற அல்லது தன் சார்பில் ஆஜராக ஒரு சட்டத்தரணியின் சேவையைப்பெற முடியவில்லை என்றும் எதிரி சமர்ப்பித்தார்.

சம்பவதினம் தான் நீதிமன்றத்தினுள் ஒரு மனுதாரராகவே நுழைந்ததாகவும் பின்னர் இத்தகைய குற்றஞ்சுமத்தப்பட்டதாகவும் விளக்கினார்.

நீதிமன்ற அவதூது சம்பந்தப்பட்ட சட்டம் பொதுமக்களின் பாதுகாப்புக்காக ஏற்பட்டதே அன்றி நீதிபதிகளைப் பாதுகாக்க ஏற்படவில்லை என்று எதிரி வலியுறுத்தினார். யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் தனது தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"நீதிமன்றத்தை அவமதித்ததுத்தொடர்பான வழக்குகளில் எதிரியின் மனோநிலை உள்ளக்கிடக்கை தொடர்புடையவை ஆயினும் நீதிமன்றத்தில் எதிரி மேற்கொண்ட நடத்தை முற்றுமுழுதாகத் தொடர்புடையது. எனவே இத்தகைய வழக்குகளை விசாரிக்கும்போது நீதிமன்றம் எதிரியின் நோக்கம் எதுவாயிருப்பினும், அவருடைய நடத்தையைப் பரிசீலிப்பது அவசியம். எதிரி 13-1-79ல் யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி முன்னிலையில் முதலியாரின் மேசைக்கு எதிரில் அமர்ந்து நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எதிரியின் மனுவில் தனக்கு ஒரு சட்டத்தரணியின் சேவை கிடைக்கவில்லை என்று கூறியுள்ளார். சட்டத்தரணியின் சேவையை இவர் பெறுவதற்குப் பல தவணைகள் வழங்கப்பட்டன. 3-12-83ல் எதிரி தனக்கு இலங்கை வழக்கறிஞர் சங்கம் சட்ட உதவி வழங்க வாய்ப்புக் கிடைத்துள்ளதாக நீதிமன்றத்தில் குறிப்பிட்டதைத் தொடர்ந்து விசாரணையை ஒத்திவைத்து அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இன்று அவர் சார்பில் ஆஜரான இரு சட்டத்தரணிகள் பின்னர் வாபஸ்பெற்றனர் ஆகவே எதிரி சார்பில் சட்டத்தரணிகள் ஆஜராகவில்லை என்ற வாதத்தை அவருக்குச் சாதகமான அம்சமாக ஏற்க முடியாது.

"எதிரி தனது மனுவில் தான் சம்பவதினம் நீதிமன்ற விசாரணையில் ஏதோவொரு கட்டத்தில் இவ்வாறு நடந்ததை மறுக்கவில்லை. ஆனால் "நீதியான, நேர்மையான உன்னத இலட்சியத்துக்காக" அவ்வாறு நடந்ததாக விளக்கினார். எத்தகைய இலட்சியத்துக்காயினும் அவ்வாறு நீதிமன்றத்தில் நடந்துகொள்வது நீதிமன்றத்தை அவமதிப்பது ஆகும். நீதிமன்றத்தின் தீர்ப்பினையிட்டு அதிருப்தியை ஒவ்வொருவரும் இவ்வாறு காட்டினால் ஒரு நீதிமன்றம் தனது அலுவல்களை நடாத்த முடியாது. இந்தநிலையில் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு தண்டனை வழங்குவது ஒத்திவைக்கப்படுகிறது" என்று மாவட்ட நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் தீர்ப்பின் இறுதியில் கூறியுள்ளார்.

ஏப்ரலில் சைவப் புலவர் பரீட்சை

(பண்டத்தரிப்பு)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடாத்தும் சைவப் புலவர் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயமண்டபத்தில் சங்கத் தலைவர் பண்டிதர் இ. திருவுநவுக்கரசு தலைமையில் நடைபெற்றபோது சைவப்புலவர் பரீட்சையை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடாத்துவது என்றும், இப்பரீட்சைக்கான ஆயத்த வகுப்புகளை இம்மாதம் முதல் சனி, ஞாயிறு தினங்களில் நடாத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. இப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் அதற்கான பாடத்திட்டங்களைப் பரீட்சைச் செயலர் சைவப் புலவர் வ. கந்தசாமி, 125, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொண்டுபெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

'முல்லைக்குமரன்' சி. முருகேசு

சரசாலை முல்லைக்குமரன் சி. முருகேசு உபாத்தியாயர் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் படிப்பித்த காலதிலே அநாதை நிலையத்திற்கும் பொறுப்பாகவிருந்து பல மாமேதைகளை உருவாக்கிய செம்மல்.

பின், நாவலர் கரவெட்டித் திடல் நாகேசுவர வித்தியாசாலை அதிபராகப் பொறுப்பேற்க முன்பு அன்னாரு தலைமை ஆசானாகி ஊரையும் கோயிலையும் பாடசாலையையும் வளம்படுத்தியவர்.

கதிர்காம வேலவரின் நிறைந்த பக்தியுடைய இவர்பெரிய சமயசீர்திருத்த வாதி. சிவதொண்டன், முருகனை உபாசித்தமையினால் கடந்த அடைமழையின் போது மின்னுமல் முழங்காமல் சரசாலையிலேயே குமரன் திருவடிசேர்ந்தார்.

இவருடைய அந்தியக்கிரியைகள் பிரார்த்தனை வைபவங்கள் நாளைவெள்ளிக்கிழமை சரசாலையில் நடைபெறுகின்றன.

அன்னாரின் ஆன்மா சாந்தியுறுக.

அன்பன்,
ஆர். ரீ.

ஊரெழு மீனாட்சிஅம்மன் இலட்சார்ச்சனை

ஊரெழு கிராமத்தின் மேற்குப் பகுதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கண்ணகை அம்மன் என வழங்கிவரும் அருள்மிகு மீனாட்சி அம்மனுக்கு 1922-ம் ஆண்டில் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. சிவஸ்ரீ ச. துரைச்சாமி ஐயரே இதன் ஸ்தாபகராவார். 1977-ம் ஆண்டில் இங்கு ஆரம்பமான புனருத்தாரண வேலைகள் முடிவுற்றதைத் தொடர்ந்து 1979-ம் ஆண்டு தைத்திங்கள் உத்திர நட்சத்திரதினத்தன்று புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் ஈழத்தின் பிரபல சிவாச்சாரியார்கள் பலர் கும்பாபிஷேகக் கிரியைகளை சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

ஊரெழு கிராமத்திலுள்ளவர்கள் மட்டுமன்றி வயல் கிராமங்களிலுமுள்ள அன்பர்கள் பலர் இந்த ஆலயத்திற்கு வருகை தந்து அருள்மிகு மீனாட்சி அம்மனை வேண்டுதல் செய்வதன் மூலம் தங்கள் தீராத வினைகளையும் துன்பங்களையும் தீர்த்துச் செல்லும் அற்புதமான நிகழ்ச்சிகளை எப்பொழுதும் காணக்கூடியதாக இருக்கிறது. தற்பொழுது இந்த ஆலயம் இதன் ஸ்தாபகரின் மருமகன் சிவஸ்ரீ மு. கிருஷ்ணசாமிக் குருக்களின் நிர்வாகத்தில் சிறப்பான வளர்ச்சி பெற்று வருவதுடன் இவரே பிரதம குருதாகவுமிருந்து பூசைகளையும் நடாத்தி வருகிறார்.

புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டதன் ஐந்து வருட பூர்த்தியை முன்னிட்டு கடந்த 14-ம் திகதி முதல் தொடர்ந்து பத்து நாட்களுக்கு இலட்சார்ச்சனை நடைபெற்றுவருகிறது. இறுதி நாளாகிய இம்மாதம் 28-ம் திகதி பகல் மகாபிஷேகமும் இரவு விசேட உற்சவமும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

-அ. கனகசூரியர்

அஞ்சலி

(சாவகச்சேரி)

பருத்தித்துறை - கற்கோவளம் விசேட சேவை அலுவலர் கே. சிவராசாவின் திடீர் மறைவையொட்டி வடமாகாண விசேட சேவை அலுவலர் தொழிற்சங்கத்தின் தலைவர் திரு. வி. எஸ். துரைராஜாவெளியிட்ட அனுதாபச் செய்தியில் அவரின் மறைவு ஈடு செய்யமுடியாதபேரிழப்பாகும் என்றும் ஆடிக்கலவரத்தின் போது அகதிகளாக்கப்பட்டு குடாநாடு திரும்பியவர்களுக்கு பருத்தித்துறையில் அகதி முகாம் அமைத்துச்செயல்பட்டார் என்றும் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். [சு]

PHILIPS

உன்னத ஒலிச் செல்வம்! பிலிப்ஸ் தரமே தனி!



ரக வரிசை, விலைக் குறைவு மட்டுமல்ல;
தொனி நலத்தின் அதி சிறப்பும் கிடைக்கிறதே!
தரமுயர்ந்த பிலிப்ஸ் உறுப்புகள் நம்பகமான செயல் வன்மைக்கு உத்தரவாதம்!

கால நிலைக்கேற்றபடி சீரமைத்த முழுச் சிறப்பான பிலிப்ஸ் தூக்கு மொடல் ரேடியோக்களையும் ரேடியோ கசெட் ஒலிப்பதிவுக் கருவிகளையும் பார்வையிடுங்கள் இன்றே ஒன்றை வாங்குவீர்கள்!

○ சிறப்பம்சங்கள்:– டீ7121
மின்சார/பாட்டறி இயக்கம் கொண்ட ரேடியோ கசெட் ஒலிப்பதிவுக் கருவி
- தன்னியக்க ஒலிப்பதிவுத் தொனிக் கட்டுப்பாடு
- தன்னியக்க நாடா நிறுத்து கருவி
- அதிர்வலை/மத்திய அலை/சிற்றலை வானொலிப் பகுதி
- உள்ளமைத்த ஒலிவாங்கி (உள்ளமைத்த நுண்ணிய ஒலிவாங்கி)
- ஒன்றிணைந்த நிறுத்து விசை, வெளியேற்று விசை
- தொனி, தரிப்புக் கட்டுப்பாட்டு அசை விசை

○ சிறப்பம்சங்கள்: ஏஎல் 215
பாட்டறியில் இயங்கும் தூக்கு மொடல் ரேடியோ
- 2 அலை வரிசைத் தேர்வு
- முறையான சுலபத் தொனித் தேர்வு (சுலபமான முறையான தொனித் தேர்வு)
- 2 நிலைத் தொனிக் கட்டுப்பாடு
- செவியில் பொருத்திக் கேட்கும் முனைகள்
- 1600 மத்திய அலை உச்சக் சக்தி

விலை US $ 21 ரூ. 970 இலிருந்து

நாடெங்கும் அனுமதி பெற்ற பிலிப்ஸ் வியாபாரிகளிடம் கிடைக்கும்.
இலங்கையில் ஏக பிரதிநிதிகள்:

ஹேலீஸ் லிமிட்டெட்
25, வொல்டர் ஒழுங்கை, கொழும்பு 10.
தொலைபேசி: 91181-9.

மேலும் கிடைக்குமிடம்: (தீர்வையற்ற விற்பனை நிலையம்) சிற்மாடி கடை எண் 2. கீழ்மாடி கடை எண் 5 கொழும்பு 3.

பிலிப்ஸ் துணையுடன் அதி சிறந்ததை அளிப்போம்.

Zenith

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சாவித்திரி-பத்மினி
சரஸ்வதி சபதம்
(புதியபிரதி) ஈஸ்மன் கலர்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
சிவாஜி — வாணிஸ்ரீ
வசந்த மாளிகை

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-சௌகார் ஜானகி
பட்டாக்கத்தி
பைரவன்
அடுத்த வெளியீடு
செந்தாமரை

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
மிக்க கமிதா
மூன்றும் பிறை
(வெள்ளிவிழா மித்திரன்)

கடைசிவாரம்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
சிவாஜி - சௌகார்
பாபு (புதிய பிரதி)

வின்ஸர் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
2வது வெற்றி மாதர்மாதம்!
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்
கடற்கரைக் கிராமத்தில் சிட்டாகப் பறந்து வானம்பாடியாய் - ஆனந்தராகமாய் சுருதிய மீட்டிவரும் காதல் ஜோடிகளின் கண்கவர் வண்ண ஓவியம். ஈழத்திரை வானிலே இசையின் தேன்வெள்ளமாய் பெருக்கெடுத்து அநேகரின் இதயத்தைக் கவர்ந்த இசை ஓவியம்.

மனோகரா (யாழ் நகர்)
Daily 10-30 a.m. 2-15
4-45, 7-00 p.m. 9-30
Grand new Release
Alexander Stewar
in
Intimate Moments
The Most Intimate Fantasies and Disi es of Men and Women
[Strictly for Adults]
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்
(Color)

லிடோ [யாழ்நகர்]
தினசரி 3 காட்சிகள்
WHO FINDS A FRIEND FINDS A TREASURE
(Scope Color)

வெலிங்டன்
(யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-00
முத்துராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
காற்றினிலே வரும் கீதம்

"குற்றச் செயல்களை ஒழிப்பதன் மூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம்"

(கரவெட்டி)

"கிராமப்புறங்களில் நிலவும் குற்றச் செயல்களை ஒழிப்பதன் மூலம் நாட்டில் ஓர் சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். இப்பணியில் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது பொதுமக்களின் கடமையாகும் இவ்விடயத்தில் பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுச் சபைகளின் தேவை மிக அவசியமாகின்றது."

இவ்வாறு யாழ். மாவட்ட பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு சபைகள் அமைப்பாளர் சார்ஜன்ட் திரு. எஸ். புண்ணியமூர்த்தி வல்வெட்டித்துறைப்பொலிஸ் பிரதேச பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுச் சபை அங்குரார்ப்பணவைபவத்தின்போது உரையாற்றுகையில் கூறினார். உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் வல்வை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. அன்ரன் சந்திரசாகரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. புண்ணியமூர்த்தி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; "இதற்கு முன்பும் இதுபோன்ற சபைகள் இருந்தும் அவை வெற்றிகரமாக இயங்கமுடியாமைக்கு காரணம் பொதுமக்களின் ஆதரவு இன்மையே காரணமாகும். "இச்சபைகள் சரியான முறையில் இயங்குமானால் நீதிமன்றமவரை செல்லக்கூடிய பிரச்னைகளை முளையிலேயே கிள்ளிவிடக் கூடியதாக இருக்கும். இன்று வடக்கில் திருட்டு கொள்ளை போன்ற குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றை ஒழிக்க இச்சபைகளின் தேவை மிக அவசியமாகின்றது' என்றார். வல்வை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. அன்ரன் சந்திரசாகரா உரையாற்றுகையில் "பொலிஸ் பொதுமக்கள் உறவில் விரிசல் காணப்படுவதால் குற்றச் செயல்புரிபவர்களுக்கு கொண்டாட்டமாகவுள்ளது. இவர்களால் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவி மக்களே என்று கூறினார்.

கிராம சேவை அலுவலர் திரு. எம். வேலுப்பிள்ளை, பெ. மாணிக்கவாசகர் ஆகியோரும் உரையாற்றினர். இப்பொலிஸ் பிராந்தியத்தில் உள்ளஎட்டுகிராமசேவை அலுவலர் பிரிவுகளுக்கும் ஒவ்வொரு நல்லுறவுச் சபைகள் நியமிக்கப்பட்டன. மத்திய சபையில் தலைவராக இன்ஸ்பெக்டர் திரு. அன்ரன் சந்திரசாகரவும் செயலாளராக திரு. எம். பொன்னம்பலமும் உப செயலராக திரு. ப. சந்திரசேகரமும் தெரிவாகினர்.

இன்று மட்டும்
சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
OMAR SHARIF
RYAN ONEAL
GREEN ICE
Action - Suspense-Color
மேலைநாடுகளில் நம்மவர்களால் என்றும் காண முடியாத விஞ்ஞான வளர்ச்சியின் பிரமாண்ட கட்டட வங்கி ஒன்றில் நடைபெறும் கொள்ளை! உங்கள் இதயத்தையும் கொள்ளை கொள்ளட்டுமே!

3-வது "ஜனரஞ்ஜன வாரம்
றீகல் (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,

மோகன்... பூர்ணிமா ஜெயராம்...
பயணங்கள் முடிவதில்லை
(ஈஸ்மென் கலர்)

பதிவேடுகளில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு அவசரசத்திர சிகிச்சையை நடத்தினேன் மறுநாள் உடல்நிலை சற்றுத் தேறி இருந்தது. ஆனால் மூன்றாம் நாள் நிலைமை கவலைக்கிடமாகி இறந்து விட்டார். சுகாதார அமைச்சின் உதவிப்பணிப்பாளர் டாக்டர் எம். இராஜசேகரனும் சாட்சியம் அளித்தார். விசாரணை தொடர்கிறது.

இன்றைய பலன்

தை மாதம் 5ம் திகதி
வியாழக்கிழமை
(19-1-84)

மேடம்: தொழில் துறையில் முன்னேற்றமான மாற்றங்கள் தென்படும் அதிமுக்கிய நல்ல பயணங்களுக்கு வழி கோலப்படும் உறவினர் உற்சாகந் தருவர்.

இடபம்: பொருளாதாரநிலையில் நல்ல திருப்பம் ஏற்படும் காதலருக்கு கனகூஷியான தினம் புதுவரவும் உற்சாகத்தைத்தரும் பொன்னான தினம்.

மிதுனம்: எண்ணிய கருமங்களில் தடை ஏற்படும் சிந்தனை சிதறடிக்கப்படும் ஆயுத பீடை உடல்நலம் பாதிக்கப்படலாம் குடும்பத்தில் நச்சரிப்புகள் கொக்கரிக்கும் வஞ்சக உறவு சஞ்சலத்தைஏற்படுத்தும்.

கடகம்: இடர்கள் பல தாக்கும் இன்னலின் பின்னல் இதயத்தைப் புண்படுத்தும் உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக் கொள்ளுவீர்.

சிங்கம்: பணவிடயத்தில் திருப்தி காணப்படும் மனதில் நிம்மதி பிறக்கும் இனபந்தங்களின் கொண்டாட்டமும் விருந்துபசாரமும் உண்டு.

கன்னி: அவசரப் போக்கு சிக்கலைத் தோற்றுவிக்கும் மனதில் விரக்திதோன்றும் வீணான சிந்தனையால் சோர்வு தோன்றும்.

துலாம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும் சிலருக்குப் புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கலாம்.

விருச்சிகம்: நேர்முகப் பரீட்சைக்கு இன்று உகந்த தினம் தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும்.

தனுசு: தவறுகள் நடக்கலாம் நிதியும் தடுமாறும் நண்பர்களே காலை வாரிவிடக் கூடும் சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம்.

மகரம்: இன்று எண்ணிய கருமம் கணிணியமாய் முடியும் களஸ்திரவழியால் பொருள் வரவும் உண்டு பெரியோர் மதிப்பும் உண்டாம்.

கும்பம்: குறைகேட்க தேடும் கடமையில் தடைகள் தோன்றும் எதிர்பாராத நஷ்டத்திற்கு இடமுண்டு.

மீனம்: நீண்டநாள் கனவு இன்று நனவாகும் பெரியவர்கள் உதவி தாராளமாகக் கிடைக்கும் புண்ணிய விருட்பு மேலிடும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை
குவேந்திரன்

இலவச மூக்குக்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

பிரபல கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் கே. அருணாசலம், டாக்டர் எஸ். நிர்மலானந்தன் ஆகியோர் இப் பரிசோதனையை நடாத்துவார்கள்.

வடபகுதி விவசாயி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உருளைக்கிழங்கு அழிவு எம்பந்தமான கூட்டத்தில் கையில் கோப்பாய் வடக்கு விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வலி கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டம் சங்க உபதலைவர் பண்டிதர் நீசி முருகேசு தலைமையில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் நீர்வேலி தெற்கு கிளைக்குழு செயலாளர் பே. சின்னத்தம்பி பேசுகையில் நோய்வாய்ப்பட்ட, தரமில்லாத உள்ளூர் விதைகிழங்கினால்பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு அந்தருக்கு 500 ரூபா விகிதம் நஷ்டஈடுவழங்க வேண்டும் என்றார்.

கோப்பாய் வடக்கு கிளைக் குழு செயலாளர் இ. இராசரத்தினம் பேசினார்.

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தம்பு சுந்தரம்
(இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி)

மலர்வு: 1919-04-12

உதிர்வு: 1933-01-28

எங்கள் அன்புத் தந்தையே, எங்களை விட்டு பிரிந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. ஆனால் எத்தனை வருடங்கள் சென்றாலும் எமது உள்ளங்களில் உங்கள் நினைவு என்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், சகோதரர்கள், மருமக்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

வண். வடமேற்கு, ஆனைக்கோட்டை. (103)

முடிவு திகதியில் மாற்றம்

கிடுகுவேலி

வாசகர் போட்டி

நீண்ட காலத்திற்குப் பின்னர் ஈழநாடு வாரமலரில் பரபரப்பான தொடர் நாவல் என்ற புகழைச் சம்பாதித்திருப்பது 'ஈழநாடு' வாரமலரில் வெளிவந்து கொண்டிருக்கும்

'கிடுகுவேலி தொடர் நாவலின் முடிவு எப்படி அமையும்?'

சுருக்கமாக உங்கள் முடிவை எழுதி அனுப்பி வையுங்கள். நாவலின் முடிவைச் சரியாக எழுதி அனுப்பும் வாசகருக்கு

500 ரூபா பரிசு வழங்கப்படும்!

இப்பரிசுத் தொகையை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள,
சம்பந்தன் வைத்தியசாலையும் வைத்திய ஆலோசனை நிலையமும்,
நிறுவனத்தினர் வழங்குகின்றனர்.

முடிவு திகதி: 25-1-1984

அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர், வாரமலர்,
ஈழநாடு, யாழ்ப்பாணம்.

குறிப்பு: மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் 'கிடுகு வேலி வாசகர் போட்டி' எனக் குறிப்பிடவும்.

★ இப்போட்டியில் 'ஈழநாடு' ஊழியர்களோ அவர்களின் குடும்பத்தவர்களோ பங்குபற்றமுடியாது.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்க புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டம் நேற்று யாழ். மாநகரசபை மண்டப அறையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ் மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் கலந்துகொண்டார். நடப்பு வருட உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். எஸ். குகநாதன் (ஈழநாடு), உப தலைவர்கள்: திரு.ஏ.என்.எஸ். திருச்செல்வம் (தினகரன்), திரு. எஸ். சிறீதிரவேல் (திஜலண்ட்), திரு. கே. ஜீவகதாஸ் (வெளியீட்டாளர்), செயலாளர் திரு. பெரி.சண்முகநாதன் (ஆங்கில சஞ்சிகை) உபசெயலாளர்கள்: திரு. பா. அனந்தகிருஷ்ணன் (ஈழநாடு), திரு. க.கணேசலிங்கம் பொருளாளர்: திரு.எஸ்,ஜே.ஜெயக்குமார் (தினபதி), உபபொருளார்: திரு. சி,எம்.எஸ் சண்முகநாதன் (டெய்லிநியூஸ்).

நிர்வாக சபைஉறுப்பினர்கள் திரு எஸ் ராமச்சந்திரன் (வீரகேசரி), திரு. எம். வரதராஜா (தினபதி , திரு. ஐபா சச்சிதானந்தன் [வானொலிச்செய்தியாளர் , திரு. ஈ. கே. ராஜகோபால் (ஈழநாடு), திரு. வி.கந்தசாமி (வீரகேசரி), திருவாளர்கள் ஏ. வி. மாணிக்கம், ஏ.பி. சூரியகாந்தன் (ஈழநாடு), திரு. ஆ. யோ. பற்றிமாகரன் (எழுத்தாளர்), திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்(கவிஞர்).

வடமராட்சியில் அமைதியாக நடந்த பொங்கல்

(புலோலி)

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புலோலி, நெல்லியடிப் பகுதிகளில் தைப்பொங்கல் மிக அமைதியாகவே கொண்டாடப்பட்டது.

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம் இந்துக்களின் கலை, கலாச்சாரங்களைப் பிரதிபலிக்குமுகமாக ஆண்டுதோறும் பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்தில் நடாத்திவந்த பட்டமேற்றும் போட்டியும் பொங்கல் விழாவும் இன்றைய சூழ்நிலையில் நடாத்தக்கூடாதென்பதற்காக இவ்விழா இரத்துச் செய்யப்பட்டதாக சங்கச்செயலாளர் திரு சு. திருச்செல்வம் தெரிவித்தார்.

கணிசமான இல்லங்களில் பொங்கல்பானையே ஏறவில்லை. நாள் வியாபாரம் செய்த வியாபார நிலையங்கள்கூட எந்தவித மான ஆடம்பரமுமின்றி வியாபாரம் செய்தன.

கிராமத்தின்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கவும், சமையத்துறையில் ஈடுபாடடை ஏற்படுத்தவும், பாலர் பாடசாலைகள், சுகாதார சிகிச்சை நிலையங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்யவும் இந் நிலையங்கள் பெரிதும் உதவவேண்டும்'' என்றார்.

புதிய சபையின் முதல் நடவடிக்கை

(ஊரெழு)

புன்னாலைக்கட்டுவன் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் பொது மக்கள் தொடர்புச் சபையினர் எடுத்துக்கொண்ட தீவிர நடவடிக்கை காரணமாக பல நாட்களாக இருந்துவந்த புன்னாலைக்கட்டுவன்-குப்பிளான் கிராமங்களுக்கிடையேயான பிரச்னை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

இம்மாத ஆரம்பத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மேற்படி பொலிஸ் - பொதுமக்கள் தொடர்புச்சபையில் திரு.வே. செல்லையாதலைவராகவும், திரு. ச. முருகநேசன் செயலாளராகவும், ஏனைய உறுப்பினர்களாக திருவாளர்கள் வே. நாகநாதர், எஸ். நல்லையா, த சிவஞானகுரு, மு தெய்வேந்திரம் எஸ். முத்துலிங்கம் ஆகியோரும் நியமனம் பெற்றிருக்கிறார்கள். புன்னாலைக்கட்டுவன் கிராமசேவை அலுவலர் இந்த தொடர்புச்சபையின் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினராகக் கடமையாற்றுவார்.

கலை விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு நலன்புரிச் சபை நடாத்தும் பாலர் கலைவிழா ஞாயிற்றுக்கிழமை மாலை வாரிவளவு திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அதிபர் திரு செ. தேவதாசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். பரிசில் பெறும் மாணவர்களுக்கு திருமதி நாகேஸ்வரி தேவதாசன் பரிசில்கள் வழங்குவார். மாணவர்களின் நடன, வாத்திய இசைப் போட்டிகளும் இடம்பெறவுள்ளது. (வெ)

மதிப்பீடு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேசன் நேசையா தலைமையில் குழுவொன்றையும் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயகோன் நியமித்துள்ளார்.

விதிகள் பிரதான பொறியியலாளர் திரு எஸ். எம். வி திசநாயகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அமரன் அல்பிரட், யாழ் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு.எஸ். சிவதாசன், யாழ். மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ் பி.பாலசிங்கம் (குழு செயலாளர்) ஆகியோர் இக் குழுவில் அடங்குவர்.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதான வீதிகள் கூட எக்காலத்திலும் இல்லாதவாறு படுமோசமான நிலையில் சீர்கேடடைந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் வீதியை எடுத்துக்கொண்டால் அன்ற ஆழமான குண்டு குழிகள், எந்த வாகனங்களும் செல்லமுடியாதளவுக்கு இருக்கின்றன.

அமைச்சினால் ஒதுக்கப்பட்ட பணம், குண்டு குழிகளை மாத்திரம் நிரப்புவதற்குக்கூடப் போதாதென அறியப்படுகிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வீதிகளும் புனரமைப்புச் செய்யப்பட்டாலே தவிர 'பூசி மெழுகு'வதால் எவ்வித பலனும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வீதிகள் சரிவரத் திருத்தம் செய்யப்படாவிட்டால் இன்னும் சில மாதங்களில் வாகனங்கள் நடமாட முடியாத பயங்கரநிலை ஏற்படும் என்று பிரயாணிகள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது. (மா)

நாங்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த மூன்று தாதிகளும், கன்னியாஸ்திரி ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களினால் உண்ணாவிரதிகள் வானொலியில் கடத்தப்பட்ட பொழுது குறிப்பிட்ட மூன்று தாதிகளும் கன்னியாஸ்திரியும் அந்த வானில் கடத்திச் செல்லப்பட்டது தெரிந்ததே.

இந்து மகளிர் கல்லூரிக்கண்மையில் துப்பாக்கி நபர்களினால் கடத்தப்பட்ட வான் சென்றுகொண்டிருந்தபோது தங்களை இறக்கிவிடும்படி அழுது குறறியதாகவும், அவர்கள் அவ்விடத்தில் வானிலிருந்து இறக்கிவிட்டுச் சென்றுவிட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

சட்டத்தரணி எஸ். பாலகப்பிரமணியம், தாதிமார் வாக்குமூலமளிக்க உதவியாயிருந்தார். [மா]

ரஷ்ய மொழியில் மகாபாரதம்

புதுடில்லி, ஜன. 18

மகாபாரதம் ரஷ்ய மொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் நான்குஆண்டுகள் ரஷ்யமொழி ஆசிரியராகப் பணிபுரிந்த சோவியத் ஆசிரியர் ஒருவர் மகாபாரத மொழி பெயர்ப்பச் செய்துள்ளார்.

இன்று அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி கடையிற்சுவாமிகள் கோவிலில் இன்று நண்பகல் அன்னதானம் வழங்கப்படவுள்ளது தைபூசவிழா நடைபெறுவதையிட்டு அன்னதானம் வழங்கப்படுவதாக கோவில் பரிபாலனசபை அறிவித்துள்ளது. (மா)

சர்வகட்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குறித்து இன்று மகாநாடு ஆராயுமென்று கூறப்படுகிறது.

இன்றைய மகாநாட்டில் திரு. தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி கலந்துகொள்ளமாட்டாது.

சர்வகட்சி மகாநாடு நேற்று நடைபெறவில்லை. (வெ)

30 அகதிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இல்லை என்று தெரியவந்துள்ளது.

அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் திரு பிரட்மன் வீரக்கோனின் அண்மைக்கால சுற்றுநிருபத்தின்படி, மலையகப் பகுதிகளுக்கு மீண்டும் செல்லவுள்ள குடும்பங்களுக்கு தலா ரூபா 2,500ம், ஒரு வாரத்துக்குத் தேவையான 3 கிலோ அரிசி, 3 கிலோ கோதுமை மாவும், அரைக் கிலோ சீனியும் வழங்கப்படும் எனத் தெரியவந்துள்ளது.

இவற்றுடன் சுமார் 3 வார காலத்துக்குத் தேவையான உணவுப் பொருட்களைக்கொள்வனவு செய்வதற்கு ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள 14 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ரூபா 150ம், 14 வயதுக்குட்பட்டவர்களுக்கு ரூபா 75ம் வழங்கப்படும் எனவும் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படியும் நடக்கிறது

ரூபவாஹினியில் தமிழ்ப்படம் ஒளிபரப்பப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டபோது, அச்செய்தி மிகவும் இனிப்பாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து ஓடிய படங்களும் ஜோராக இருந்தன.

ஆனால் பின்னர் என்ன நடந்தது.....? கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைதான்!

கடந்த புதன்கிழமை (நேற்றல்ல) ஒளிபரப்பப்பட்ட ''ராஜபார்ட் ரங்கதுரை'' திரைப்படத்தில் இறுதிக் கட்டம் முழுவதுமே கத்தரிக்கோலுக்கு இரையாகிவிட்டது என்று கூறலாம். அத்தனை பெரும் வெட்டு!

இதற்கு முன்னர் ஓடிய 'வீரத் திருமகன்', 'ஸ்ரீவள்ளி', 'பராசக்தி' எல்லாம் எப்படி? கத்தரிக்கோலின் 'பதம்' பட்டே ஒளிபரப்பப்பட்டுள்ளன.

இந்த நிலையில், வாரம் ஒரு தமிழ்ப் படம் என்ற நிலை மாறி மாதம் ஒரு படம் என்று கதை வந்திருக்கிறது. அந்தப் படங்களிலும் இப்படி வெட்டு விழும் என்றால் தமிழ்ப் படங்கள் ரூபவாஹினியில் அவசியமா? நியாயமான கேள்வி இது!

'ஊடுருவி'

விளக்க மறியலில் பணிப் பெண்!

[யாழ்ப்பாணம்]

பிரசவம் பற்றி அறிவிக்காத இளம் பணிப் பெண் (22வயது) விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்

வட்டுக்கோட்டையில் உள்ள ஒருவரது வீட்டில் இவ்விளம் பெண் பணிப் பெண்ணாக 14 மாதம் வேலை செய்தவராம்.

ஏற்கனவே திருமணமாகி கணவனைக் கைவிட்ட இப் பெண், சம்பவதினம் ஒரு சிசுவைப் பெற்றெடுத்து அதனைச் சாக்கொன்றினால் சுற்றி வீட்டு அலுமாரிக்குப்பின்னால் ஒளித்து வைத்தார் என்றும் அன்றிரவே இவருக்கு இரத்தப் பெருக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என்றும் அப்பொழுது இவர் சிசு ஒன்று பிரசவித்திருப்பதற்கான அறிகுறி தென்படுவதாக டாக்டர் தெரிவித்ததைத் தொடர்ந்து வீட்டுக்காரர் சாக்கால் சுற்றி வைக்கப்பட்ட இறந்த குழந்தையைக் கண்டு பிடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக விசாரணை நடத்திய பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் சாட்சியங்களின் பின்னர், இளம்பெண்ணை இம்மாதம் 23ம் திகதி வரை றிமாண்டில்வைக்கும்படி உத்தரவிட்டு, காங்கேசன்துறைப் பொலிசாரை விசாரணை செய்யும்படி பணித்தார். [மா]

ரூ. 1 லட்சம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றால் சிலவீடுகளில் நிலத்தினூடாக- கள்ளத்தனமாக மின் இணைப்பு பொருத்தப்பட்டிருந்ததையும் அதிகாரிகள்குழு கண்டுபிடித்துள்ளது.

அந்தப்பகுதி சனசமூக நிலயம் ஒன்று களவாக மின்சக்தி பாவனைக்கு உடந்தையாக இருந்ததையிட்டு, அங்கு மின்பாவனை துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

இதுகுறித்து காங்கேசன் துறைப் பொலிசாருக்கு அதிகாரிகள்குழு புகார் செய்துள்ளது.

உடுவில் பகுதியிலும் மின்சக்தி களவாக உபயோகிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதுடன், இதுசம்பந்தமாக சிலர் விசாரணைக்காக சுன்னாகம் பொலிசில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற மின்சக்திகளவுகள் குறித்து, தீவிர நடவடிக்கை எடுக்கும்படி, யாழ். மாவட்ட அமைச்சர், யாழ். அரசாங்க அதிபரைப் பணித்துள்ளார். (மா)

போலி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மையான வர்கள் தமிழர்கள் எனத் தெரியவருகின்றது

தொடர்ந்து இவர்கள் சம்பந்தமாக விசாரணைசெய்வதற்காக, இந்த ஐவரையும் இளைஞர்களும் இரகசிய பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஜனாதிபதியுடன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பம் தருமாறு ஜனாதிபதியைக் கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரு தயாபரன் மேலும்தெரிவிக்கையில்; எமது கோரிக்கை பற்றி ஜனாதிபதியுடன் பேசுவதற்கு இன்னுமொரு சந்தர்ப்பம் தருமாறு கோரி, ஜனாதிபதிக்கு தாங்கள்தந்தி ஒன்றை நேற்றிரவு அனுப்பி வைத்துள்ளதாகவும் சொன்னார்.

''இடம் பெயர்ந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்; வடக்கு-கிழக்குப் பகுதிகளில இல்லாதபீடங்களை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்னும் இரு கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியதாகவும், இவ்விரு கோரிக்கைகளையும்ஜனாதிபதிமுன் வைக்கவுள்ளதாகவும் மாணவர் ஒன்றியத் தலைவர் அறிவித்தார்

அமிருக்கும் அறிவிப்பு

இடம் பெயர்ந்த பல்கலைக்கழக தமிழ்மாணவர் ஒன்றியம் தமது பிரச்னைகள் குறித்து நேற்று ஜனாதிபதியைச் சந்திக்க முடியாதது தொடர்பாக தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு தந்தியொன்றை அனுப்பிவைத்தனர்.

திரு அமிர்தலிங்கம் இது பற்றி ஜனாதிபதியின் செயலகத்திற்கு நேற்று அறிவித்தார். (மா-வெ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் சார்பாக வீரகேசரி நாளிதழ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெள்ளிக்கிழமை ஜனவரி மாதம் 19-திகதி அன்றைய தினம் வெளியிடப்பட்டது. | பதிவு விதி, 66-இலங்கை அரசாங்கத்தில் 1964-ல் Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number R 190236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.